**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 11 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ஏ.எண்.4/2025 அதன் இ.ஏ.எண்.3/2022**
**அதன் இ.பி.எண்.97/2020 அதன் அ.வ.எண்.531/2019**

முருகன் .... மனுதாரர் /1 ம்எதிர்மனுதாரர்/ வாதி

/எதிர்/

1) O.M.பரீத்புகாரி ... 1 ம் எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2) அழகுதுரை ... 2 ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் / 3 ம் தரப்பினர்

இந்த மனுவானது, 03.07.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.S.அகமது அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1). இந்த மனுவானது, மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக் கொண்டு மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி (3A) மற்றும் பிரிவு 151 ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) இம்மனுவின் மனுதாரர், நிறைவேற்றுதல் மனுவின் மனுதாரர் என்றும், இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர்/நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரரை மனு தபசில் இடத்திலிருந்து காலி செய்யக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து அதில், பிறந்த தீர்ப்பாணையின் பேரில் இ.பி.எண்.97/2020 தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் நீதிமன்றத்தின் மூலம் சுவாதீனம் எடுப்பதற்கு நீதிமன்ற அமீனா மூலம் சென்றதாகவும், மேற்படி 3ம் தரப்பினர்/இம்மனுவின் 2ம் எதிர்மனுதாரர் இ.ஏ.எண்.3/2022 மனு தாக்கல் செய்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

2.2) மேற்படி இ.ஏ.எண்.3/2022ல் மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கட்சியை நிரூபிக்க இந்த மனுவுடன் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி ஆவணங்கள் தேடிப் பார்த்ததில் தற்போது தான் கிடைத்தது என்றும், ஆதலால் எதிருரை தாக்கல் செய்யும் போது, மேற்படி ஆவணங்களை மனுதாரரால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3) 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்**

3.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு எந்த ஒரு பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்றி மனு தபசில் சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற தவறான எண்ணத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மனு தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு கொடுத்ததன் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் வாடகைதாரராக வசித்து வருவதாக சொல்வது பொய் என்றும், மனுதாரர், 1ம்

எதிர்மனுதாரர் மீது பொய்யான சங்கதிகளை சொல்லி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ஒருதலைபட்சமாக பெற்றுள்ளார் என்றும், மனுதாரர் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்யாவிட்டால் மனுதாரருக்கு அளவு கடந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என சொல்வது பொய் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4). இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5). இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6). இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில் 1407, 1424 மற்றும் 1400 ம் பசலி ஆண்டிற்குரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படம், குறுந்தகடு ஆகியவைகள் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை தேடிப் பார்த்த போது தற்போது தான் கிடைத்தது என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எதிருரை தாக்கல் செய்யும் போது மேற்படி ஆவணங்களை தன்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1407, 1424 மற்றும் 1400 ம் பசலி ஆண்டிற்குரிய ஆவணங்கள் அசல் ஆவணமாக உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பு இல்லை. மேலும், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யும் போது எதிர்மனுதாரர்கள் தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படத்தை யார் எப்போது எடுத்தது என்றும், எந்த மின்னணு சாதனத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்றும், மேலும், மேற்படி குறுந்தகட்டில் உள்ள சங்கதிகளை யார் எந்த

மின்னணு சாதனத்தில் இருந்து பதிவேற்றம் செய்தது என்பது பற்றி தன் மனுவில் விளக்கவில்லை என்பதால், மேற்படி புகைப்படம் மற்றும் குறுந்தகடானது இரண்டாம் நிலை மின்னணு சான்றாவணம் என்பதால், இந்திய சாட்சியச் சட்டப்பிரிவு 65 B (4)ன் கீழான சான்றிதழை மேற்படி ஆவணத்துடன் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், அதற்கான விளக்கத்தை மனுவில் குறிப்பிடவில்லை என்பதாலும், புகைப்படம் மற்றும் குறுந்தகடு ஆகிய ஆவணம் குறியீடு செய்வதற்கு உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 1407, 1424 மற்றும் 1400ம் பசலி ஆண்டிற்குரிய ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்தும், புகைப்படம் மற்றும் குறுந்தகட்டைப் பொறுத்து இம்மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரம் நிராகரிக்கப்படுகிறது.

**இறுதியில், இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள 1407, 1424 மற்றும் 1400ம் பசலி ஆண்டிற்குரிய ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்தும், புகைப்படம் மற்றும் குறுந்தகட்டைப் பொறுத்து நிராகரித்தும் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஜூலை மாதம் 11ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.07.11 17:06:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

**1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்** – இல்லை
**2). எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்** – இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.07.11 17:06:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.ஏ.எண்.4/2025
அதன் இ.ஏ.எண்.3/2022
அதன் இ.பி.எண்.97/2020
அதன் அ.வ.எண்.531/2019
வரைவு /நேரிய உத்தரவு
நாள். 11.07.2025.